

# மத்தளம்

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் வருடாந்த செய்தி மடல்

வருடம் 2018 | மடல் - 01 | வெளியீடு : தை 2019

## 'நஞ்சு மனிதர்' தெருவெளி நாடகத் தயாரிப்பும் ஆற்றுகைகளும்




கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினால் தயாரிக்கப் பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டுள்ள தெருவெளி நாடகமாக "நஞ்சு மனிதர்" எனும் அளிக்கையுள்ளது.

விவசாயப் பயன்பாட்டில் நவீன கிருமிநாசினிகளின் அபாயகரமான தாக்கங்களைப் பேசும் இந்நாடகம் நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களினால் எழுதி நெறியாள்கை செய்யப் பட்டிருந்தது.

இந்நாடகத்தில் நுண்கலைத்துறையில் கற்கும் மாணவர்களான ரா.தனஞ்சயன், ஜிவிலோஜினி, வே.லோகுஜன், வி.விக்னேஸ்வரன், அ.சந்திரகுமார், கு.கனிஸ்ரா, சு.சுஜாஜினி, பு.ரதிகலா, கு.நிலுஜா, சு.சஞ்சீவன், கு.மதுசாந், சி.சியானி, வி.கிருபானந்தம், பே.நிதாகர், ப.லுக்சிகா, சு.மாதுளன், இரா.சுலக்சனா ஆகியோர் நடிகர்களாகவும், திருமதி.துஸ்யந்தி சத்யஜித், ஞா.கபிலாசினி, சு.புஸ்பலதா, பா.பகீரதன், பொ.சர்மிளாகாயத்திரி, ச.பாத்திமாசர்மின், த.நிரோஜன், ப.பர்ஹானா ஆகியோர் ஓவியம் மற்றும் ஒப்பனையாளர் களாகவும், பாடுனர்களாக சு.சந்திரகுமார், சோ.ஞானசக்தி, பே.நிசாந்தினி, அ.ஆன்நிவேதிகா, க.சர்மிலன், ச.கிருஸ்ணதரன், அ.பௌருஜா, பி.சுஜாதா, ச.மகிழினி, இ.கிருபாகரன், த.ஹரன், ர.சாந்தினி, ச.பிலிசியா, மோ.பாணுகா, கோ.மயூரி ஆகியோரும் ஆற்றுகை செய்திருந்தனர். இந்நாடகத்தின் இணைப்பாளர்களாக ந.கோகுலன், மு.மு.ப.நுபிஸா ஆகியோர் செயற்பட்டிருந்தனர்



இந்நாடகத்தின் ஆற்றுகை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- 06.06.2018 ஆந் திகதியன்று கிழக்குப் பல்கலைக்கழக மூதவைக் கட்டிட முன்றலில் ஒத்திகை ஆற்றுகையாக நடைபெற்றது.
- 28.06.2018 ஆந் திகதியன்று களுதாவளையில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சூழல் நேயத்திற்கான விவசாய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஓர் அம்சமாக ஆற்றுகை செய்யப்பட்டது.
- 16.10.2018 ஆந் திகதியன்று உலக உணவு தினத்தினை முன்னிட்டு கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கலந்துரையாடலின் நிறைவினைத் தொடர்ந்து கிழக்குப்பல்கலைக்கழக மூதவை கட்டிட முன்றலில் காலை 10 மணியளவில் ஆற்றுகை செய்யப்பட்டது.
- 25.10.2018 ஆந் திகதியன்று போசாக்கினை அதிகரித்து ஊட்டச்சத்தினை முன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில் C.E.R.I. நிறுவனத்தின் அனுசரணையுடன், களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாலை 3:00 மணியளவில் களுவாஞ்சிகுடி எருவில் பிரதான வீதியில் ஆற்றுகை செய்யப்பட்டது.

## நுண்கலைத்துறை தலைவரிடமிருந்து...

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பாடத்திட்டத்தினை மையப்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆற்றுகைகளூடாக, பல்கலைக்கழகம் சார்ந்தும், சமுதாயம் சார்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோட்பாடுகளையும் ஆராய்ச்சிகளையும் சமூக நலனுக்கான வேலைத்திட்டங்களாக முன்னெடுப்பதில் நுண்கலைத்துறை ஆர்வஞ் செலுத்தி வருகின்றது.

இந்த வகையில் 2018 ஆம் ஆண்டு நுண்கலைத்துறையால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பதிவாக இச்செய்தி மடலைக் கொண்டு வருகின்றோம்.

நமது கூத்தரங்கின் களரியடித்தலிலும், ஆற்றுகைகளிலும் மத்தளம் எனும் தோல் வாத்தியம் மிகவும் முக்கியத்துவமானதாக விளங்குகின்றது. எனவே நமது சமுதாய அரங்கின் ஆதாரமான வாத்தியத்தின் பெயரை நமது செய்தி மடலுக்குச் சூட்டியுள்ளோம்.

இம்மடலுக்கு நான் பிரதம ஆசிரியராக இருந்த போதிலும், இதனைத் தொகுத்து வடிவமைத்த நுண்கலைத்துறையின் விரிவுரையாளர் து.கௌரீஸ்வரன் அவர்களுக்கும், உதவியாக இருந்த உதவி விரிவுரையாளர் செல்வி எம்.எம்.எப்.நுபிஸா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சு.சந்திரகுமார்.**
தலைவர், நுண்கலைத்துறை, கி.ப.க

மத்தளம்

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் வருடாந்த செய்தி மடல்

பிரதம ஆசிரியர்
**திரு.சு.சந்திரகுமார்,**
முதுநிலை விரிவுரையாளர்,
தலைவர், நுண்கலைத்துறை

ஆசிரியர்
**திரு.து.கௌரீஸ்வரன்,**
விரிவுரையாளர், நுண்கலைத்துறை

உதவி ஆசிரியர்
**செல்வி எம்.எம்.எப். நுபிஸா,**
உதவி விரிவுரையாளர், நுண்கலைத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்துக்கான சட்டங்கொடுத்தல் விழா

கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையில் வருடாந்தம் நடைபெறும் செயன்முறையில் கூத்தரங் கைக் கற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓரம்சமாக இவ் வருடம் நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்திற்கான சட்டங் கொடுக்கும் நிகழ்ச்சி 02.11.2018 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் வந்தாறு மூலையிலுள்ள பல்கலைக்கழக மூதவைக் கட்டிடத்தின் முன்றலில் நடைபெற்றது.

நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலை பண்பாட்டுப் பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், கௌரவ அதிதியாக கலை பண்பாட்டுப் பீட அவை உறுப்பினர் திரு.அ.சுகுமாரன் அவர்களும் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், கல்வி சாரா அணியினரும், மாணவர்களும் பங்கு பற்றினார்கள்.





இக்கூத்துச் செயற்பாடானது துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் பொறுப்பிலும், இணைப் பாக்கத்திலும் முன்னெடுக்கப்படும் அதேவேளை இக்கூத்தின் அண்ணாவியாராக திரு.ப.கதிர்காமநாதன் அவர்களும், ஏடு பார்ப்போராக திரு.சி.சுந்தரலிங்கம், திரு.இரா.டிலக்ஸன் ஆகியோரும் பங்குபற்றுகின்றார்கள்.

இக்கூத்திற்கான பாத்திரங்களை நுண்கலைத்துறையில் விசேட கற்கையினைத் தொடரும் பதினெட்டு மாணவர்கள் வைபவ ரீதியாக அண்ணாவியாரிடமிருந்து பெற்றுக் கொண்டதுடன் ஒவ்வொரு கூத்தருக்குமான ஆற்றுகைகள் சிறிதளவு நிகழ்த்தப்பட்டு இச்சட்டங் கொடுத்தல் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## மன்னாரில் வாசகப்பா அரங்கேற்றத்தில் அதிதியாக கௌரவம் பெற்ற நுண்கலைத்துறைத் தலைவர்



நான்கு தசாப்தங்களின் பின்னர் 30.09.2018 ஆந் திகதி மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் அச்சங்குளம் கிராமத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்ட "புனித சூசையப்பர் வாசகப்பா" கூத்தின் அரங்கேற்ற விழாவில் கிழக்குப் பல்கலைகழக நுண்கலைத்துறை தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்கள் சிறப்பு அதிதியாகப் பங்கு பற்றியிருந்தார். விழா ஏற்பாட்டாளர்களால் இவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமும் வழங்கப்பட்டது.



# நுண்கலைத்துறை நடத்திய பட்டிப் பொங்கலுடன் தொடர்புடைய உள்ளூர் கலை பண்பாட்டு விழா



இயற்கையையும் தொழிலையும் மதித்து வணங்கும் தமிழர் திருநாளே தைபொங்கல் ஆகும். உழவுத் தொழிலில் உறுதுணையாய் இருக்கும் மாடுகளுக்கு பொங்கலிட்டு மரியாதை செலுத்தும் நிகழ்வே பட்டிப் பொங்கல். இந்நிகழ்வை முன்னிட்டு பட்டிப் பொங்கலுடன் தொடர்புடைய உள்ளூர் கலை பண்பாட்டு விழா கடந்த 17.01.2018 ஆந் திகதி காலை 10.00 மணியளவில் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை முன்றலில் நடாத்தப்பட்டது.

நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்குச் சிறப்பு அதிதிகளாக கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி திரு. மு.ரவி அவர்களும், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப் பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும், மொழித்துறைத் தலைவர் கலாநிதி ஜே.கெனடி அவர்களும், பயிரறிவியல் துறையின் முன்னாள் தலைவர் திரு.எஸ்.சிறிகிருஸ்ணா அவர்களும், யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பேராசிரியை ஏ.கிருஸ்ணவேணி அவர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் சிறப்பு அம்சமாக "பட்டிக்காரர்கள் எதிர் கொள்ளும் சவால்கள்" எனும் தலைப்பில் ஆக்கபூர்வமான கருத்துரைகளும், கலந்துரையாடல்களும் நடைபெற்றன. பாரம் பரியமாக மாட்டுப்பட்டிகளைக் கொண்டு வாழும் விவசாயிகள் வருகை தந்து இந்நிகழ்ச்சியை அர்த்தமுள்ளதாக்கினர்.



நஞ்சு மனிதர் வீதி நாடக ஒத்திகை ஆற்றுகையின் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊஞ்சல் விழா கொண்டாட்டம்

தமிழர் பண்பாட்டின் ஓர் அம்சமான ஊஞ்சல் விழாவை முன்னெடுக்கும் நிகழ்ச்சி நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் கடந்த 18.01.2018 ஆந் திகதி முற்பகல் கிழக்குப்பல்கலைக்கழக முதவை கட்டிட முன்றலில் நடைபெற்றது. இவ்விழாவானது நுண்கலைத்துறையின் இறுதிவருட மாணவி தி.பிரதீபா அவர்களின் ஆய்வுச் செயற்பாடாக நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் வழிப்படுத்தலிலும் மேற்பார்வையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடை





பெற்ற இவ்விழாவுக்கு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீட பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், கிராமங்களில் ஊஞ்சல் விழா முன்னெடுப்புக்களில் ஈடுபடும் கலைஞர் திரு.வேலுப்பிள்ளை அவர்களும் பங்குபற்றி சிறப்பித்தனர். இவ் விழாவில் பல்கலைக் கழக கல்வி சார், கல்வி சாரா அலுவலர்களும், ஆராய்ச்சி மாணவர்களும், சிறுவர்களும் மற்றும் பொது மக்களும் ஆர்வத்துடனும் குதூகலத்துடனும் பங்குபற்றி கொண்டாடி மகிழ்ந்தமையினைக் காண முடிந்தது.

# கும்பக் கட்டுமானமும் காட்சிப்படுத்தலும்

திருகோணமலை பிரதேசத்தில் தனித்துவமாக விளங்கும் கும்பச் சடங்கில் பிரதானம் பெறும் கும்பக் கட்டுமானத்தினைக் காட்சிப்படுத்தும் நிகழ்ச்சி கடந்த 18.01.2018 ஆந் திகதி முற்பகல் நுண்கலைக்கூடத்தில் நடைபெற்றது. இச்செயற்பாடானது நுண்கலைத் துறையின் இறுதிவருட மாணவி சோ.ஞானசக்தி அவர்களின் ஆய்வுச் செயற்பாடாக நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் வழிப்படுத்தலிலும் மேற்பார்வையிலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் வாழும் தமிழர் பண்பாட்டுச் சூழலில் கும்பக்




கட்டுமானமும் அதன் தொழில் நுட்பத் திறனும், அதனை மையமாகக் கொண்ட சடங்குசார் நிகழ்த்துகைகளும், அதன் அழகியல் வெளிப்பாடுகளும் காத்திர மானவை என்பதனை தொனிப்பொருளாகக் கொண்டு இக்காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு அதிதிகளாக கிழக்குப் பல்கலைக் கழக கலைகலாசார பீட பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பேராசிரியை ஏ. கிருஸ்ணவேணி அவர்களும், சிறுகதை எழுத்தாளர் திரு.வி.கௌரிபாலன் அவர்களும் பங்குபற்றி சிறப்பித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களும், கல்வி சார், கல்வி சாரா அலுவலர்களும், மற்றும் பொது மக்களும் ஆர்வத்துடன் இக்காட்சியினைப் பார்த்து அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.


# தோரண காட்சிப்படுத்தல்



தமிழர் பண்பாட்டின் பாரம்பரிய கட்டிடக்கலை மற்றும் அலங்கார வேலைப்பாடுகளின் ஓர் அம்சமாக விளங்கும் 'தோரணம்' தொடர்பான கண்காட்சி நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் கடந்த 18.01.2018 ஆந் திகதி முற்பகல் நுண்கலைத் துறையின் காட்சிக் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயற்பாடானது நுண்கலைத் துறையின் இறுதி வருட மாணவி ச.அனுஜா அவர்களின் ஆய்வுச் செயற்பாடாக நுண்கலைத் துறையின் முது நிலை விரிவுரையாளரான கலாநிதி வ.இன்பமோகன் அவர்களின் வழிப்படுத்தலிலும் மேற்பார்வையிலும் மேற்கொள்ளப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு அதிதிகளாக கிழக்குப் பல்கலைக் கழக கலை





கலாசார பீட பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் பேராசிரியை ஏ.என்.கிருஸ்ணவேணி அவர்களும், சிறுகதை எழுத்தாளர் திரு.வி.கௌரிபாலன் அவர்களும் பங்குபற்றி சிறப்பித்தனர்.

இக் கண்காட்சியினை பல்கலைக் கழக கல்வி சார், கல்வி சாரா அலுவலர் களும், ஆராய்ச்சி மாணவர்களும் மற்றும் பொது மக்களும் பார்த்து இன்புற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையும் தொழில் முனைவும் கண்காட்சி

கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத் துறையின் பாடத்திட்டத்திற்கேற்ப முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு கலை கலாசார பீட மாணவர்களுக்கான "கலையும் தொழில் முனைவும்" பாடத்திற்குரிய கண்காட்சியானது 2018.02.06 ஆந் திகதி கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத் துறை காட்சிக் கூடத்தில் நடாத்தப்பட்டது.

இவ்விழாவுக்குப் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் அவர்களும், சிறப்பு அதிதிகளாக கலைப் பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும், கௌரவ அதிதிகளாக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி விறாகல் அவர்களும், விவசாய பீட பீடாதிபதி கலாநிதி பி. சிவராஜா அவர்களும், விஞ்ஞான பீட பீடாதிபதி கலாநிதி திருமதி.எம். வினோபாவா அவர்களும், நூலகர் திரு. டபிள்யு.ஜே.ஜெயராஜ் அவர்களும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த அகமட் லெப்பை சயித்



ஸாபித் அவர்களும், CEDE பணிப்பாளர் கலாநிதி திருமதி சி.மகேந்திரநாதன் அவர்களும், SDC பணிப்பாளர் கலாநிதி எஸ்.சுதர்சன் அவர்களும், நிதியாளர் ஜனாப் .எம்.எம்.முகமட்பாரீஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்

இச் செயற்பாடானது கலையாக்கத் திறன்களை வைத்து சுய தொழிலை மேற்கொள்வதற்கான முன்னுதாரண நடவடிக்கையாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. இக் கண்காட்சியின் போது கலாசார உணவு வகைகளும், மாணவர்களினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

## உடற்பொறிமுறை நடிப்பு பற்றிய களப்பயிற்சி

இந்தியாவின் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் நாடகத் துறையில் முதுமாணிக் கற்கையினை மேற்கொண்ட திரு.சி.இராமசாமி அவர்களால் கிழக்குப் பல்கலைக் கழக நுண் கலைத் துறையில் 24.07.2018 அன்று உடற் பொறி முறை நடிப்புத் தொடர்பான களப்பயிற்சி நடாத்தப் பட்டது. இக் களப்பயிற்சியானது நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு. சந்திரகுமார் அவர்களின் இணைப் பாக்கத்தில் நடைபெற்றிருந்தது.

இக்களப் பயிற்சியில் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத் துறை மாணவர்கள் பங்குபற்றித் தமது கற்றல் அனுபவங்களை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்கள்.



## சமுதாயத் தொழில் முனைவுக்கான கண்காட்சி



இது "கிழக்கு வளாக மரங்களும் கைவினைகளும்" என்னும் பெயரில் நடைபெற்றது. கற்றல் கற்பித்தல் வலுவாக்கத்துக்கும், மாணவர்களின் படைப்பாக்க வெளிப்பாட்டிற்கும், விசேடமாக முன் பட்டதாரி மாணவர்களிடையே தொழில் முனைவை விருத்தி செய்யும் நோக்கிலும் இக்கண்காட்சி நுண்கலைத் துறையின் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையிலும், ஆலோசனை வழிக்காட்டலிலும் 19.07.2018ஆந் திகதி காலை 9.00 மணியளவில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட முன்றலில் நடைபெற்றது.

மாணவர்களால் வரையப்பட்ட கிழக்குப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள மரங்களின் ஓவியங்களும், மரம், தும்பு முதலான ஊடகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இக் கண் காட்சியில் பிரதம அதிதியாக கிழக்குப்பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் அவர்களும், சிறப்பு அதிதிகளாக கிழக்குப்பல்கலைக் கழக பிரதி துணை வேந்தர் வைத்திய கலாநிதி கே.இ.கருணாகரன் அவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி. சி.ஜெயசங்கர் அவர்களும், தமிழ்நாட்டு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் நாட்டுபுறவியல் துறையினைச் சேர்ந்த ஓய்வு நிலைப் பேராசிரியர் திரு.இ.முத்தையா அவர்களும் அவரது துணைவியார் வைத்திய கலாநிதி திருமதி விஜயலக்சுமி முத்தையா அவர்களும், கிழக்குப்பல்கலைக் கழக நுண்கலைத்



துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் திரு. சி.மௌனகுரு அவர்களும், கலை கலாசார பீடத்தின் துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கல்வி சாரா ஆளணியினரும், மாணவர்களும் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக நடை பெற்ற மர நடுகையில், பங்குபற்றிய சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி ஜி.தில்லைநாதன் அவர்களுக்கு நுண் கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களினால் நினைவுச் சின்னம் கொடுத்து கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய விழாவில் பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளும், கண்காட்சியும்



மட்டக்களப்பில் வருடாந்தம் பல்வேறு மனிதர்களும் ஒன்றிணையும் விழாவாக மாமாங்கேஸ்வரர் ஆலயத் திரு விழா நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக் காலத்தில் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத் துறையினரால் பாரம்பரிய ஆற்றுகைக் கலைக் கூடம் ஏற்படுத்தப்பட்டு கண் காட்சியும், பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் ஆற்றுகைகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பாரம்பரிய கலை விழா மாமாங்கத் திருவிழாவை மையப்படுத்தி ஆலய வண்ணக்குமார்களின் ஆதரவுடன் நடைபெற்று வருகின்றது. 2011 ஆம் வருடத்தில் நுண்கலைத் துறைத் தலைவராகக் கடமையாற்றிய கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின் திட்டமிடலில் சக விரிவுரையாளர்களின் பங்குபற்றுகையுடன் முதல் முறையாக இப்பாரம்பரிய அரங்க விழா ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து நுண்கலைத் துறைத் தலைவராக இருந்த கலாநிதி வஇன்பமோகன் அவர்களால் தொடரப்பட்ட இக்கலைச் செயற்பாடு தொடர்ச்சியாக எட்டாவது தடவையாக இந்த வருடமும் நுண்கலைத் துறைத்தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டிருந்தது.

மாமாங்கத் திருவிழாவை மையப் படுத்திய நுண்கலைத் துறையின் இப்பாரம்பரியக் கலை விழாவானது கிழக்கிலங்கையின் பாரம்பரியக் கலைகள் தொடர்பான உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வறிவாளர்களை ஈர்க்கும் ஒரு வெளியாக மட்டக்களப்பு மாமாங்க விழாக் காலத்தை இன்னுமொரு பரிமாணத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்த 2018 ஆம் வருடத்திற்கான நிகழ்ச்சி கடந்த 05.08.2018 ஆந் திகதி தொடக்கம் 07.08.2018 ஆந் திகதி வரைக்கும் மூன்று நாட்கள் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட கூத்துக் களரியில் பிற்பகல் மற்றும் இரவு வேளைகளில் நடைபெற்றன.

ஆரம்ப வைபவம் ஐந்தாந் திகதி முற்பகல் பத்து மணிக்கு நுண்கலைத் துறைத் தலைவர் திரு சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் அதிதிகளாக கிழக்குப் பல்கலைக் கழகப் பிரதி உப வேந்தர் வைத்திய கலாநிதி கே.கருணாகரன், கலைப்பீடாதிபதி திரு.மு.ரவி, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர், மாமாங்கேஸ்வரர் ஆலய குரு பிரம்மஸ்ரீ ஆதி சவுந்தரராஜன் குருக்கள், ஆலய வண்ணக்கர்களான



தி.விக்கிரமன், க.புவனச்சந்திரா, உதவி வண்ணக்கரான உ.சுவேந்திரகுமார் ஆகியோர் பங்குபற்றி சிறப்பித்தார்கள். ஆரம்ப விழாவில் விசேடமாக மங்கிகட்டைச் சேர்ந்த அண்ணாவியும் பூசகருமான திரு.தங்கராசா சாந்தகுமார் அவர்களும், தன்னாமுனையைச் சேர்ந்த அண்ணாவியார் திரு.சீனித்தம்பி அலைக்சாண்டர் அவர்களும், குருந்தையடி முன்மாரி, காஞ்சிரங் குடாவைச் சேர்ந்த கரகாட்டக் கலைஞை டிலானி குணரெத்தினம் அவர்களும், அவர்கள் மேற்கொள்ளும் கலைப் பணிகளுக்காக நுண்கலைத்துறையால் மாண்பு செய்யப்பட்டார்கள்.

ஆரம்ப வைபவத்தையடுத்து ஆலய முன்றலில் நுண்கலைத்துறையினால் அமைக்கப்பட்ட பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளுடன் தொடர்புடைய கலைப் பொருட்களின் கண்காட்சிக் கூடம் பிரதி துணைவேந்தர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளின் விழாவில் ஐந்தாந் திகதி



மாலை 5:00 மணிக்கு களுதாவளை கிராமிய கலைக் குழுவின் "வசந்தன் கூத்தும்", இரவு 11:00 மணிக்கு முனைக்காடு நாகசக்தி கலைக்கழகம் வழங்கிய "சத்தியவான் சாவித்திரி" தென்மோடிக் கூத்தும், ஆறாந் திகதி திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு நுண்கலைத்துறை வழங்கிய "மகிடிக் கூத்தும்", இரவு 11:00 மணிக்கு சொர்வாமுனை வேல்விழி கலைக் கழகம் வழங்கிய "ஆரவல்லி சூரவல்லி வீரவல்லி" வடமோடிக் கூத்தும், ஏழாந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5:00 மணிக்கு மண்டபத்தடி மலைமகள் கலாமன்றம் மற்றும் வவுணதீவு விபுலானந்தர் கலைக் கழகம் என்பன வழங்கிய "ஏமாற்றாதே ஏமாறாதே", "வல்லவனுக்கு வல்லவன்" எனும் நகைச்சுவைக் கூத்துக்களும், இரவு 11:00 மணிக்கு கன்னன்குடா கண்ணகி முத்தமிழ் மன்றம் வழங்கிய "வாளவீமன் நாடகம்" தென்மோடிக் கூத்தும் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு மட்டக்களப்பு மாமாங்கத் திருவிழாவில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறையின் பாரம்பரிய அரங்க விழா நடைபெறுவது ஒரு மரபாக வளர்ந்துள்ள நிலையில் பெருமளவான பொது மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் கலை விழாவிற்காகக் காத்திருந்து ஆர்வத்துடன் பாரம்பரிய கலை ஆற்றுகைகளைப் பார்வையிட்டு கலையின்பம் பெற்றுக் கொண்டமையை அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலைத் துறையின் தயாரிப்பாக மகிழக் கூத்து



மட்டக்களப்பின் பாரம்பரிய நிகழ்த்து கலைகளுள் ஒன்றான மகிடிக் கூத்து சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. இக்கூத்தானது சாதாரண மக்களால் முன்னெடுக்கப்படும் ஆதிக்கங்களுக்கு எதிரான உணர்வுகளை வெளிக்காட்டும் ஓர் அரசியல் அரங்காகவும் ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது.

மகிடிக் கூத்தரங்கை கிராமத்திற்குச் சென்று கற்கும் செயற்பாடு 2017 ஆம் வருடம் நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் திட்டமிடலுடன் வந்தாறுமூலை பலாச்சோலைக் கிராமத்தினை மையப்படுத்தி மேற் கொள்ளப்பட்டிருந்தது. குறித்த கிராமத்தில் வாழும் மகிடிக்கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து கூத்தரங்கினைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடு இதனூடாக முன்னெடுக்கப்பட்டது. பாரம்பரியக் கூத்தர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களும் இணைந்து ஆற்றுகை செய்யும் மகிடிக் கூத்து இதனூடாக முதன் முறை உருவாக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியான ஆற்றுகை முன்னெடுப்பில் பொறுப்பாசிரியரால் 2018ல் சமூகங்களிடையே பாதிப்புக்களை ஏற்படுத்தும் நுண்கடன் பிரச்சினையினையை மையப்படுத்திய வகையில் மகிடிக் கூத்து உருவாக்கப்பட்டிருந்தது. இது எரிந்து கொண்டிருக்கும் சமுதாயப் பிரச்சினையாகும்.

இம்மகிடிக் கூத்தரங்கின் ஆற்றுகைகள் முறையே 07.05.2018 ஆந் திகதி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் ஆலய முன்றலிலும், 19.06.2018 ஆந் திகதியன்று முனைக்காடு நாகசக்தி ஆலய முன்றலிலும், 06.08.2018 ஆந் திகதி மட்டக்களப்பு மாமாங்க ஆலய முன்றலிலும் நடைபெற்றன.

இம்மகிடிக் கூத்தானது நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் இணைப்பாக்கத்தில் அண்ணாவியார் திரு.சி. இராசதுரை அவர்களினால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தது. இதில் நுண்கலைத்துறையினைச் சேர்ந்த மாணவர்களான கு.மதுசாந், சு.சஞ்சீவன், பொ.சர்மிளாகாயத்திரி, ச.புஸ்பலதா, வே.லோகுஜன், அ.சந்திரகுமார், வி.விக்னேஸ்வரன், சு.மாதுளன், மோ.பாணுகா, அ.ஆன்நிவேதிகா, பே.நிதாகர், த.நிரோஜன், சி.சியானி, அ.பௌருஜா, வி.கிருபானந்தம், ஜி.விலோஜினி, பே.நிசாந்தினி, ச.பிலிசியா, கோ.மயூரி, ரா.தனஞ்சயன், கு.கனிஸ்ரா, இரா.சுலக்சனா, கு.மதுசாந், ப.லுக்சிகா, ஆகியோரும் நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களும் ஆற்றுகை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதுமாணி மாணவியின் நாடக ஆற்றுகை



நுண்கலைத்துறையில் முதுமாணிக் கற்கையினைப் பெற்று வரும் க.துர்க்கா எனும் மாணவியினால் குருக்கள்மடம் எனும் ஊரில் வாழும் சுமார் 15 இற்கும் மேற்பட்ட கட்டிளமைப் பருவத்தினைச் சேர்ந்த சிறுவர்களுடனான களப்பயிற்சி ஆற்றுகை முறைமையூடாக உருவாக்கப்பட்டிருந்த "சுதந்திரத்தைத் தேடி..." எனும் திறந்த வெளி அரங்க அளிக்கை கடந்த 26, 29 அக்டோபர் 2018 ஆந் திகதிகளில் முறையே குருக்கள்மடம் முருகன் ஆலய முன்றலிலும், பழைய பாடசாலை மைதானத்திலும் நடைபெற்றிருந்தது.

சமகாலத்தில் கட்டிளமைப்பருவச் சிறார்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை உரையாடலுக்குக் கொண்டு வரும் ஆற்றுகையாக இது இடம்பெற்றிருந்தது. பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற ஆற்றுகையின்போது ஆய்வு மேற்பார்வையினைச் செய்யும் முதுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி சி.ஜெயசங்கர், சு.சந்திரகுமார், ஆகியோரும் மற்றும்



எழுத்தாளர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள், சிறுவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப்பெருமளவானவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆய்வுச் செயற்பாடாக சிறுவர் கூத்தரங்கு முன்னெடுப்பு



சிறுவர்களின் பல்துறை ஆளுமைத் திறன்களைக் கட்டியெழுப்பி அவர்களை நற்பிரசைகளாக உருவாக்குவதற்கு வாய்ப்புக்களை வழங்கும் சிறுவர்களுக்கான கூத்தரங்கச் செயற்பாட்டினை இறுதி வருட சிறப்புக் கற்கை மாணவர்களின் ஆய்வுச் செயற்பாடாக முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 2018 இல் களுவாஞ்சிக்குடியில் "வனராணி" எனும் வடமோடி சிறுவர் கூத்தரங்கச் செயற்பாடு மேற்கொள்ளப் பட்டது.

இச் செயற்பாடானது நுண்கலைத் துறையின் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையில் சிறப்புக் கற்கையினை மேற் கொண்டுள்ள இறுதி வருட மாணவன் வே.லோகுஜன் அவர்களின் ஆய்வுச் செயற்பாடாக துறைத் தலைவர் திரு. சு.சந்திரகுமார் அவர்களின் வழிப்படுத்தலிலும், மேற்பார்வையிலும் முன்னெடுக்கப்பட்டது.

இக் கூத்தரங்கின் சட்டங் கொடுத்தல் விழா 30.08.2018 ஆந் திகதியும், சதங்கையணி விழா 30.09.2018 ஆந் திகதியும், அரங்கேற்ற விழா 13.10.2018 ஆந் திகதியும் நுண்கலைத் துறைத் தலைவரின் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இது சுமார் நான்கு தசாப்தங்களின் பின்னர் மீண்டும் குறித்த பிரதேசத்தில் கூத்தரங்கச் செயற்பாட்டினை முன்னெடுத்த நடவடிக்கையாக அமைந்திருந்தது. ஊர் மக்களின் பங்குபற்றுகையிலும் ஒழுங்கமைப்பிலும் இக்கூத்தரங்க ஆய்வுச் செயற்பாடு வெற்றிகரமாக நடந்தேறியது.

குறித்த கூத்தினை ஏட்டண்ணாவியார் திரு.செ.சிவநாயகம் அவர்கள் எழுதியுள்ள அதே வேளை இதனை அண்ணாவியார் திரு.சீ.அலக்ஸ்சாண்டர் அவர்கள் பழக்கியிருந்தார்.

இக் கூத்தில் இ.யக்சனா, மு.மதுஸ்கா, உ.கிருஸ்ணிகா, வ.விலுக்சன், வி.ஜிபஸ்டிகா, க.கஜானன், ஜெ.லக்சனன், த.சினிசன், தே.துர்க்காசன், யு.டிசாந், அ.விக்னேஸ், தெ.ருவேகா, சி.சதுர்சிகா, தி.கனிஸ்கா, சு.பிரசாந் ஆகிய சிறுவர்கள் பாத்திரமேற்று ஆடினார்கள். இக்கூத்தின் ஏடு பார்ப்போராக த.முத்துலிங்கம், வே.லோகுஜன் ஆகியோரும், சபையோராக வே.ஹரீஸ், க.ஜனோஜன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.



## கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத் துறையினூடாக நடாத்தப்பட்ட 'பேசும் இரேகைகள்' ஓவியக் கண்காட்சி



2018.05.15 ஆந் திகதி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் "பேசும் இரேகைகள்" எனும் தலைப்பில் ஓவியக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்கண்காட்சி நுண்கலைத் துறையின் சிறப்புக் கற்கை மூன்றாம் வருட மாணவி கே.எம். எப். பர்ஹானா என்பவரினால் மேற் கொள்ளப்பட்டது. பல்கலைக் கழக கற்கை நெறியின் ஒரு மாத கால உள்ளகப் பயிற்சியினை மையப்படுத்தியதாக இக்காட்சி குறித்த மாணவியால் மேற் கொள்ளப் பட்டிருந்தது.

மட்டு நகரில் வாழும் பெண்ணிலைவாத ஓவியரான கமலா வாசுகி என்பவரிடம் சென்று குறித்த மாணவி பெண்ணிலை நோக்கிலான ஓவியப் படைப்பாக்கம் குறித்து கற்றுக் கொண்டவற்றை அடிப்படையாக வைத்து மாணவியின் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் அவருடைய ஆக்கங்கள் இவ் ஓவியக் கண்காட்சியூடாக முன் வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வு நுண்கலைத்துறையின் தலைவர் சு.சந்திரகுமாரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலை கலாசாரபீட பீடாதிபதி திரு.மு. ரவி அவர்களும் விசேட அதிதிகளாக மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணிலைவாத ஓவியரான கமலவாசுகி அவர்களும், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும், மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல ஓவியர் சுசிமன் நிர்மலவாசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் எனப் பலரும் இக்கண்காட்சியினைப் பார்வையிட்டனர்.

## யாழ் தமிழமுதத்தில் அரங்கேறிய நுண்கலைத்துறையின் ஆற்றுகைகள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களும் இணைந்து 17.09.2018 ஆந் திகதி யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்திய "தமிழமுதம்" என்னும் நிகழ்ச்சியில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினால் புலிக் கூத்து வசந்தன் கூத்து ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன. வசந்தன் கூத்தினை கவிஞர் தேனூரான் அவர்களும் புலிக்கூத்தினை அண்ணாவியார் சி.இராசதுரை, கு.ஆண்டியப்பன் ஆகியோரும் பயிற்றுவித்தனர். நுண்கலைத்துறை மாணவர்கள் பங்குபற்றிய இவ்வாற்றுகைகள் நுண்கலைத் துறைத்தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் இணைப்பாக்கத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய நுண்கலைத்துறை மாணவர்கள்

அனைத்து பல்கலைக்கழகங்களுக்குமிடையிலான விளையாட்டுப் போட்டி 2018 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து பங்குபற்றிய போட்டியாளர்களுள் நுண்கலைத்துறை மாணவர்களும் இடம்பிடித்திருந்தார்கள். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றதன் ஊடாக அனைத்து பல்கலைக்கழக போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தகுதியினை இவர்கள் பெற்றிருந்தனர். இம்மாணவர்கள் எதிர்காலத்தில் மேலும் தமது திறமைகளை வளப்படுத்தி தேசிய ரீதியில் வெற்றிப் பதக்கங்கள் பெற வேண்டும் என வாழ்த்தி மகிழ்கின்றோம். அவர்களின் விபரம் பின்வருகின்றது.



**சு. சஞ்சீபன்**
இரண்டாம் வருடம் நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கை மாணவன்
பங்குபற்றிய போட்டிகள்
குண்டு எறிதல், ஈட்டி எறிதல், பரிதி வட்டம் வீசுதல்



**சு.சுஜாஜினி**
இரண்டாம் வருடம் நுண்கலை சிறப்புக் கற்கை மாணவி,
பங்குபற்றிய போட்டி
கராத்தே மற்றும் Chess



**சி.சிஜானி**
இரண்டாம் வருடம் நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கை மாணவி
பங்குபற்றிய போட்டி எல்லே



**ச. மகிழினி**
இரண்டாம் வருடம் நுண்கலை சிறப்புக் கற்கை மாணவி
பங்குபற்றிய போட்டி
- கூடைப்பந்தாட்டம்



**அ.சந்திரகுமார்**
நான்காம் வருடம், நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கை மாணவன்
பங்குபற்றிய போட்டி
மல்யுத்தம்

## தேசிய விருதுகள் பெற்ற நுண்கலைத்துறை மாணவன் ரா.தனஞ்சயன்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட இளைஞர்களுக்கான விருது வழங்கல் 2018 விழாவில் தமிழ் மொழிப் பிரிவில் சிறந்த நடிகருக்கான தேசிய விருதினை நுண்கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் விசேட கற்கையினை மேற்கொள்ளும் இறுதி வருட மாணவனான தி.ரா.தனஞ்சயன் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளார். இளைஞர்களுக்கான நாடகப் போட்டியின் பொருட்டு சுதந்திர அரங்கு எனும் குழுவினால் தயாரிக்கப்பட்ட 'ஒன்றும் ஒன்றும்' எனும் நாடகத்தில் பாத்திரமேற்றுத் தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்தியமைக்காக இவ் விருது இவருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இத்தோடு இவரால் 2017 இல் வெளியிடப்பட்ட 'மானிடப் புயல்' எனும் நாடகப் பிரதி அரச இலக்கிய விருதிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அப்பிரதி சிறந்த நாடக இலக்கியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டின் சிறந்த தமிழ் நாடக இலக்கியத்திற்கான கலாசார திணைக்களத்தின் விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளது. நடிப்பிற்காகவும், நாடக எழுத்தாக்கத்திற்காகவும் மாணவ நிலையில் விருதுகள் பெற்றுள்ள ரா.தனஞ்சயன் அவர்களை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## "காவு கொள்ளி" சிறுவர் நாடக ஆற்றுகை

டெங்கு ஒழிப்பு தொடர்பான திறந்த வெளி சிறுவர் அரங்க ஆற்றுகையான "காவுகொள்ளி" எனும் நாடகம் நுண்கலைத் துறையின் ஒழுங்கமைப்பில் கடந்த 18.01.2018 ஆந் திகதி முற்பகல் கிழக்குப் பல்கலைக் கழக மூதவை கட்டிட முன்றலில் நடை பெற்றது. இவ்வாற்றுகையானது நுண்கலைத் துறையின் இறுதி வருட மாணவி தா.நவராணி அவர்களின் ஆய்வுச் செயற்பாடாக கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின் வழிப்படுத்தலிலும் மேற்பார்வையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நுண்கலைத் துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும், சிறுகதை எழுத்தாளர் திரு.வி. கௌரிபாலன் அவர்களும் பங்குப்பற்றி சிறப்பித்தனர். இந்நாடகத்தினை பல்கலைக்கழக கல்வி சார், கல்வி சாரா அலுவலர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் மற்றும் பொது மக்களும் பார்த்து மகிழ்ந்தனர்.

## பேராசிரியர் இ.முத்தையா அவர்களின் உரையரங்கு



தமிழ் நாட்டின் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் நாட்டாரியல் துறையின் ஓய்வு நிலைப் பேராசிரியர் இ.முத்தையா அவர்களினால் நுண்கலைத் துறையில் 20.07.2018 அன்று "காலனித்துவமும் பின்காலனித்துவமும்" எனும் தலைப்பில் கருத்துரையும் அதனையடுத்து கலந்துரையாடலும் நடை பெற்றது. இதனை இணைப்பாக்கம் செய்து ஒழுங்கு படுத்தியவர் நுண்கலைத் துறையின் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களாவார்.

பின்காலனித்துவம் தொடர்பான கோட்பாட்டுப் புரிதலையும், பின்காலனித்துவ ஆய்வறிவு முறைமைகளையும் பற்றிய புரிதலை மேலும் வளமாக்கிக் கொள்வதற்கு இவ்வுரையரங்கு வாய்ப்பினை வழங்கியிருந்தது. இதில் கணிசமான விரிவுரையாளர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கு பற்றி ஆக்க பூர்வமான உரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2018 இல் நுண்கலைத்துறை விரிவுரையாளர்களின் ஆய்வளிக்கைகளும் ஆக்கங்களும்



**கலாநிதி வ.இன்பமோகன்,**
முதுநிலை விரிவுரையாளர்

| ஆய்வளிக்கை செய்யப்பட்ட ஆய்வு மகாநாடு, இடம், காலம் | ஆய்வுத் தலைப்பு |
|---|---|
| சர்வதேச ஆய்வு மகாநாடு, பேராதனைப் பல்கலைக்கழகம் – 22,23 நவம்பர் 2018 | சடங்குகளில் பக்தி இலக்கியத்தின் வகிபாகம் : "மகமாரித் தேவி திவ்வியகரணி"ஐ அடிப்படையாகக் கொண்ட ஆய்வு |
| சர்வதேச ஆய்வு மகாநாடு, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கி.ப.க - 15 – 18 ஜீலை 2018 | தமிழர் தத்துவ அழகியல் மரபு : கிழக்கிலங்கைச் சடங்குகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உரையாடல் |
| ஆறாவது சர்வதேச ஆய்வு மகாநாடு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் 26 ஜீன் 2018 | "கன்னன்குடா கிராமத்தில் கூத்துக் கலையின் பயில்வும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும்" |

**கூத்து ஆற்றுகைக்கான இணைப்பாக்கம்**
குருக்கள்மடம் - வைகாசி 2018
"சயிந்தவன் வதை"
வடமோடிக்கூத்து

**பதிப்பாசிரியர் -**
**ஐரோப்பிய மெய்யியல் வரலாறு,**
பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா,
குமரன் புத்தக இல்லம், 2018
**சயிந்தவன் வதை - வடமோடிக் கூத்து,**
கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம், 2018

**ஆசிரியர் -**
மொழிதல் (ஆய்விதழ்)
தொகுதி 5, எண் 1 - 2018



**திரு.சு.சந்திரகுமார்,**
முதுநிலை விரிவுரையாளர்,
தலைவர், நுண்கலைத்துறை

| ஆய்வளிக்கை செய்யப்பட்ட ஆய்வு மகாநாடு, இடம், காலம் | ஆய்வுத் தலைப்பு |
|---|---|
| மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினால் 2018 பங்குனி 8ம் திகதியில் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வு மகாநாடு | "சூழலியலும் சமய இலக்கியமும்: திருஞானசம்பந்தரின் ஈழத்துத் திருப் பதிகங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு" |
| கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் 2018 ஆடி 15 –18ம் திகதி களில் நடாத்தப்பட்ட மூன்றா வது சர்வதேச ஆய்வு மகாநாடு | கூத்து ஆற்றுகையில் பெரும் காட்சியாகத் திகழும் வட்டக்களரியும் அதன் செயல்மைய முன்னெடுப்பும் - ஓர் பங்குகொள் ஆய்வு |
| கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் 2018 ஆடி 15 –18ம் திகதிகளில் நடாத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச ஆய்வு மகாநாடு | மகிடிக் கூத்து ஆற்றுகை முறையும் அதனை கலை வழிக் கற்பித்தலினூடாக முன்னெடுத்தலும் - ஓர் பங்குகொள் ஆய்வு" |
| கிழக்குப்பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தி னால் 2018 ஆவணி 16, 17ம் திகதிகளில் நடாத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச ஆய்வு மகாநாடு | "கூத்தை ஆற்றுகை யினூடாகக் கற்றல் - வீரகுமாரன் வடமோடிக் கூத்தை ஆற்றுகையினூடாகக் கற்பித்த முறையினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு" |
| International research seminar of the SAARC Cultural Centre & Indira Gandhi National Centre for Arts (Hindu Cultural Trails), Indira Gandhi National Centre for Arts, New Delhi, India on 8th to 9th October 2018 | "Saivism in Koothu - A Traditional Community Theatre" |
| திருநெல்வேலி ரஹ்மத் நகரில் அமைந்துள்ள சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியினரால் 2018 மார்கழி 18ம் திகதி வெளியிடப்பட்ட ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ளது | "கூத்துருவாக்கத் திற்கான களரியடித்தல்: இளம் கூத்தர்களையும் அண்ணாவிமார்களையும் உருவாக்கும் வெளி - ஓர் பங்குகொள் ஆய்வு" |



**திரு.கு.ரவிச்சந்திரன்,**
முதுநிலை விரிவுரையாளர்,
நுண்கலைத்துறை

| ஆய்வளிக்கை செய்யப்பட்ட ஆய்வு மகாநாடு, இடம், காலம் | ஆய்வுத் தலைப்பு |
|---|---|
| கிழக்குப்பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தினால் 2018 ஆவணி 16, 17ம் திகதிகளில் நடாத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச ஆய்வு மகாநாடு | "உத்தியாக்கள் சடங்குகள் தொடர்பான இனவரைவியல் ஆய்வு" |

**கூத்து ஆற்றுகைக்கான இணைப்பாக்கம்**
குறிஞ்சாமுனை, வவுணதீவு மே-யூன் 2018
"துரோணர் வில்வித்தை" வடமோடிக்கூத்து



**திருமதி.துஸ்யந்தி சத்தியஜித்,**
உதவி விரிவுரையாளர், நுண்கலைத்துறை,

| ஆய்வளிக்கை செய்யப்பட்ட ஆய்வு மகாநாடு, இடம், காலம் | ஆய்வுத் தலைப்பு |
|---|---|
| எட்டாவது சர்வதேச ஆய்வு மகாநாடு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், 17 டிசம்பர் 2018 | "பாடசாலைக் கலைசார் கல்விச் செயற்பாட்டில் சிறுவர்களுக்கான வசந்தன் கூத்தின் முக்கியத்துவம்" |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய பண்பாட்டு விழாவில் நுண்கலைத்துறையின் ஆற்றுகைகள்



மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இலக்கிய பண்பாட்டு விழா கடந்த 2018 டிசம்பர் மாதம் 22, 23 ஆந் திகதிகளில் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியின் மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மா.உதயகுமார் அவர்களின் தலைமையில் மிகக் கோலாகலமாக நடந்தேறியது. இவ்விழாவில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பங்குபற்றுகையானது பண்பாட்டு ஊர்வலம், புலிக்கூத்து ஆற்றுகை, சிறுவர் நாடக ஆற்றுகை என்பவற்றினூடாக இடம்பெற்றிருந்தது. கல்லடி உப்போடையிலுள்ள விபுலானந்தர் மணிமண்டபத்திலிருந்து ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலத்தில் நுண்கலைத் துறையின் பாரம்பரிய வாத்திய முழக்கமும், கூத்தரின் நடைபவனியும் இடம்பெற்றது. இக்கூத்தரின் ஊர்வலத்தில் கூத்தராக வேடமிட்டு சு.சஞ்சீவன், கு.நிலுஜா ஆகிய மாணவர்கள் பங்குபற்றினார்கள்.



அன்றைய தினம் முதலாவது அமர்வில் நுண்கலைத்துறையினால் தயாரிக்கப்பட்ட புலிக் கூத்து ஆற்றுகை நிகழ்த்தப்பட்டிருந்தது. இப்புலிக் கூத்தானது வந்தாறுமூலை பலாச் சோலையைச் சேர்ந்த பாரம்பரியக் கலைஞர்களான திரு.சி.இராசதுரை அண்ணாவியார், திரு கு. ஆண்டியப்பன் ஆகியோரின் பயிற்றுவித்தல் ஊடாக நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் இணைப் பாக்கத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வாற்றுகையில் நுண்கலைத்துறை மாணவர்களான வி.கிருபானந்தம், (புலி) கோ.மயூரி, (வேடுவிச்சி) பே.நிதாகர், (காட்டு ராசா) அ.சந்திரகுமார், (புலி வளர்ப்போன்) வி.விக்னேஸ்வரன் (சின்னவன்) ஆகியோர் பங்குபற்றியிருந்தார்கள்.





மாலை அமர்வில் நுண்கலைத் துறையின் தயாரிப்பாகிய "கூழ் குடித்த குரங்குகள்" எனும் சிறுவர் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. இந்நாடகமானது நுண்கலைத்துறையின் விரிவுரையாளரான திரு.து.கௌரீஸ்வரன் அவர்களினால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்டிருந்ததுடன் இதன் உதவி நெறியாளராக உதவி விரிவுரையாளரான சோ.ஞானசக்தி அவர்களும், உடை, ஒப்பனையினை விரிவுரையாளர் திருமதி பிரசாந்தி இளங்கோ, உதவி விரிவுரையாளர் செல்வி எம்.எம்.எப்.நுபிஷா மற்றும் மாணவர்களான ஞா.கபிலாசினி, கு.கனிஸ்ரா ஆகியோரும், காட்சியமைப்பினை மாணவர்களான வி.கிருபானந்தம், அ.சந்திரகுமார் ஆகியோரும் மேற்கொண்டிருந்தார்கள்.

இந்நாடகத்தில் முதலாம் வருடத்தில் நுண்கலைத் துறையின் பாடங்களைக் கற்கும் முதலாம் வருட மாணவர்களான பா.கிருபாலினி, ந.ஜீவரோகினி, அ.ஜனனியா, சி.டனுசியா, சி.சிந்துஜா, த.டன்சிகா, வ.கிருசாந்தினி ஆகியோரும் மற்றும் மோ.கெட்சியா, ஜெ.ஜெசிபா, சொ.பவிகாந், இ.றினுக்சன் ஆகியவர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.

இந்நாடகத் தயாரிப்பிற்கான ஆலோசனையினையும் வழிகாட்டுதலையும் நுண்கலைத்துறைத் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்கள் வழங்கியதுடன் நுண்கலைத்துறையின் ஆற்றுகைகளுக்கான இணைப்பாக்கத்தையும் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நுண்கலைத்துறைக்குள் உள்வாங்கப்பட்டுள்ள புதிய விரிவுரையாளர்கள்



நுண்கலைத்துறையில் புதிய விரிவுரையாளர்களாக 2018 ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் முறையே திரு.து.கௌரீஸ்வரன், திருமதி பிரசாந்தி இளங்கோ ஆகிய இருவரும் இணைந்து கொண்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் இளமாணி சிறப்புக் கற்கையினையும், முதுமாணி கற்கையினையும் கற்று பட்டங்களைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலைத்துறையின் ஒழுங்கமைப்பில் நடந்தேறிய பல்பண்பாட்டு இசைத் திருவிழா 2017 - ஓர் அனுபவக் குறிப்பு



நமது பண்டைய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பல்பண்பாட்டு கலாசார நிகழ்வுகள் மிக முக்கியமானவையாக அமைகின்றன எனலாம். அந்தவகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் ஒன்றிணைத்து பல்பண்பாட்டு இசைத் திருவிழா 11.12.2017யில் மிகவும் பிரமாண்டமாக நடைபெற்றது.

மாணவர்களுக்கான அழகியல் மற்றும் படைப்பாக்க விருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இசை நிகழ்ச்சியினூடாக பல்கலைக்கழகத்தில் உகந்த சூழலைக் கொணர்ந்து சமூக



நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு 'பல்பண்பாட்டு இசைத்திருவிழா 2017' எனும் எண்ணக்கரு ஒழுங்கு படுத்தப்பட்டு நுண்கலைத்துறையின் தலைவர் திரு.சு.சந்திரகுமார் அவர்களின் ஒழுங்கமைப்பு மற்றும் இணைப்பாக்கத் தினூடாக அனைத்துப்பீட மாணவர் களையும் ஒன்றிணைத்ததாக 11.12.2017 இரவு 7.30 மணியளவில் கிழக்குப் பல்கலைக்கழக பிரதான மைதானத்தில் இசை நிகழ்ச்சி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. உயர்கல்வி அமைச்சின் வேலைத்திட்டமாகிய இந்த நிகழ்ச்சிக்கான தொடர்புபடுத்தலை கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் அவர்கள் மேற் கொண்டிருந்தார்.

இதற்கான ஏற்பாடுகள் மூன்று மாத காலமாக நுண்கலைத்துறைத் தலைவரால் முன்னெடுக்கப்பட்டது. கலை கலாசார பீடாதிபதி திரு.மு.ரவி அவர்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கி ஊக்கப்படுத்தியிருந்தார். மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் பாடல், நடனம், அறிவிப்பு தொடர்பான ஆற்றல் திறன் நிபுணத்துவங்களை வெளிப்படுத்த, வளவாளர்களால் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இசையினூ டான இந்த நல்லிணக்கத்திற்கான செயற் பாட்டிற்கு அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் முழு ஒத்துழைப்பையும் வழங்கித் தமது பங்களிப்பினைச் செய்திருந்தது.

நுண்கலைத்துறையின் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்குப்பல்கலைக்கழக பதில் மற்றும் பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன் அவர்கள் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும் திருகோணமலை வளாகத்தலைவர் கலாநிதி வி.கனகசிங்கம் அவர்களும் கலை கலாசார பீடாதிபதி திரு.மு.ரவி அவர்களும் வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி திருமதி வி.ராகல் அவர்களும் கௌரவ கலைஞர் திரு.ரி.மசூர்தீன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்தோடு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் அனைவரும் மாணவர்களுக்கான படைப் பாக்க நல்லிணக்க இசைத் திருவிழாவில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இசை நிகழ்வில் மாணவர்கள் 32 இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியும் 10 இற்கும் மேற்பட்ட நடனங் களை நிகழ்த்தியும் தமது கலையாக்க ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தனர். பல்கலைக்கழக மாணவர்களே





அறிவிப்பாளர்களாக ஈடுபட்டுத் தமது திறனை வெளிப்படுத்தினர். பல்கலைக் கழகத்தின் அனைத்து பீடங்களில் பயிலும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இன மத வேறு பாடின்றி வித்தியாசங்களை மதித்துத் தமது ஆற்றலால் ஒன்றிணைந்து செயற்பட்டமை இவ்விழாவின் நோக்கத்தை சாத்தியப்படுத்திக் காட்டியது. ஒருங்கிணைப்பாளரின் திட்டமிடலும் வழிநடத்தலும் மாணவர் மையப்படுத்தலும் மாணவர்களை முழுமையாக ஈடுபட வாய்ப்பளித்திருந்தது. இந்த நிகழ்ச்சி எனது திறமையினை வெளிப்படுத்திய



முதல் வளர்ச்சி படியாக அமைந்ததுடன் அதற்கான உற்சாகத்தை தந்த நுண்கலைத் துறையின் தலைவருக்கு நன்றியை கூற கடமைப்பட்டுள்ளேன்.

பல்கலைக்கழகம் அங்கு கற்கும் மாணவர்களை வேற்றுமைகளில் ஒற்றுமை காணும் நல்ல ஆக்கபூர்வமான மனிதர்க ளாகவும், அறிவு ஆற்றல் ஆளுமை உள்ளவர்களாகவும் உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்குவதே உலகத் தரமாகும். இதுவே அனைத்துப் பேதங்க ளையும் நீக்கிவிடும். இதற்கான ஒரு வழி முறையாக பல்பண்பாட்டு இசைத் திருவிழா விளங்கியது எனலாம்.

**எஸ்.பாத்திமா ஷர்பின்**
நுண்கலைத்துறை இறுதி வருட மாணவி
கிழக்கு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# நுண்கலைத் துறையின் பண்பாட்டு இசையணியின் ஆற்றுகைகள்




கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் உருவாக்கங்களுள் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக தமிழ்ப் பண்பாட்டு இசையணி விளங்கி வருகின்றது. இரண்டாயிரமாம் ஆண்டு காலப்பகுதியில் நுண்கலைத்துறையினால் கட்டமைக்கப்பட்ட இவ்விசையணி கடந்த இரு தசாப்தங்களாகத் தனது ஆற்றுகை யினை சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் 2017.2018 ஆம் ஆண்டில் குறித்த பண்பாட்டு இசையணி யில் திரு.கு.சந்திரகுமார் அவர்களின் திட்டமிடலுடன் புதிதாக தென்மோடிக் கூத்தின் ஆட்டக் கோலங்கள் உள்வாங்கப்பட்டு இவ்விசையணி மேலும் மெருகூட்டப்பட்டுள்ளது.

2018 இல் பின்வரும் நுண்கலைத்துறை மாணவர்கள் பண்பாட்டு இசையணியில் பங்குபற்றி ஆற்றுகை செய்திருந்தார்கள்.

| | | |
|---|---|---|
| கு.கனிஸ்ரா | பொ.சர்மிலா காயத்திரி | ச.மகிழினி |
| ரா.தனஞ்சயன் | ச.புஸ்பலதா | சி.சியானி |
| சு.மாதுளன் | த.நிரோஜன் | ப.லுக்ஸிகா |
| ஞா.கபிலாசினி | அ. ஆன் நிவேதிகா | பு.ரதிகலா |
| கோ.மயூரி | இரா.சுலக்சனா | பி.சுஜாதா |
| ச.பிலிசியா | எம்.தமிழினி | கு.மதுசாந் |
| பே.நிதாகர் | எஸ்.ரெபேகா மாக்ரட் | சு.சஞ்சீவன் |
| வி.கிருபானந்தம் | ஏ.சுதர்சனா | அ.பௌருஜா |
| பே.நிசாந்தினி | சு.சுஜாஜினி | ர.சாந்தினி |
| வி.விக்னேஸ்வரன் | கே.மோசிதா | மோ.பாணுகா |
| அ.சந்திரகுமார் | எம்.கோகிலப்பிரியா | வே.லோகுஜன் |
| ஜி.விலோஜினி | என்.கேதீஸ்வரி | ச. கரீஸ்தரன் |
| பா.பகிரதன் | கு.நிலுஜா | |






**2018 இல் பண்பாட்டு இசையணியின் ஆற்றுகைகள் பற்றிய பதிவுகள் இங்கு தரப்படுகின்றது**

**ஜனவரி 02 - கிழக்குப் பல்கலைக்கழகத்தில்**

02.01.2018 அன்று கிழக்குப்பல்கலைக் கழகத்தில் நீண்ட காலம் கடமையாற்றி யவர்களைக் கௌரவிக்கும் விழாவில் கௌரவம் பெற்றவர்களை வரவேற்றலில் பண்பாட்டு இசையணியின் ஆற்றுகை நடைபெற்றது

**மே 20 - பட்டமளிப்பு விழாவில்**

கிழக்குப்பல்கலைக்கழத்தில் 2018.05.20 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட விசேட பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வருகை தந்த பட்டதாரிகளை வரவேற்கும் வைபவத்தில். நான்கு அமர்வுகளிலும் நுண்கலைத் துறையின் பண்பாட்டு இசையணியின் வரவேற்பு ஆற்றுகை நிகழ்த்தப்பட்டிருந்தது.

**ஆகஸ்ட் 06 - யப்பானியத் தூதுவரை வரவேற்றல்**

கிழக்குப்பல்கலைக்கழகத்திற்கு கடந்த 06.08.2018 ஆந் திகதியன்று வருகை தந்த இலங்கைக்கான யப்பானியத் தூது வரை வரவேற்கும் நிகழ்ச்சியில் நுண் கலைத்துறையின் பண்பாட்டு இசை யணியின் ஆற்றுகை நடை பெற்றிருந்தது.

**ஆகஸ்ட் 08 - திருமலை வளாகத்தில் அதி மேதகு ஜனாதிபதியை வரவேற்றல்**

கிழக்குப்பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் 08.08.2018 ஆந் திகதி நடைபெற்ற, புதிதாக அமைக்கப்பட்ட பிரயோக விஞ்ஞான கட்டிட திறப்பு விழா மற்றும் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் பிரதம அதிதியாக வருகைதந்த அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பண்பாட்டு இசையணியினரின் ஆற்றுகை இடம்பெற்றிருந்தது.

**செப்தெம்பர் 15 - விசேட பட்டமளிப்பு விழாவில்**

கிழக்குப்பல்கலைக்கழத்தில் 2018.09.15 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட விசேட பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வருகை தந்த பட்டதாரி களை வரவேற்கும் வைபவத்தில். நான்கு அமர்வுகளிலும் நுண்கலைத்துறையின் பண்பாட்டு இசையணியின் வரவேற்பு ஆற்றுகை நிகழ்த்தப்பட்டிருந்தது.

**செப்தெம்பர் 17 - யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழமுத விழாவில்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களும் இணைந்து 17.09.2018 ஆந் திகதி யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்திய "தமிழமுதம்" என்னும் நிகழ்ச்சியில் கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் நுண்கலைத் துறையின் பண்பாட்டு இசையணியின் ஆற்றுகை இடம்பெற்றிருந்தது.

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு 065 222 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media